# GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE PAPPIREDDIPATTI

*Affiliated to Periyar University, Salem-11*

*(Recognized Under Section 2(f) & 12(B) of UGC Act, 1956)*

**Dharmapuri - 636905, Tamilnadu, India.**

**Website:** www.gascprp.in **phone:** 04346-246212


## ஆங்கில இலக்கிய மன்றம்

**இடம்:** திருவள்ளுவர் திறந்தவெளி கலையரங்கம் **தேதி:** 05-09-2023

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி பாப்பிரெட்டிப்பட்டியில் 05/09/2023 செவ்வாய்கிழமை அன்று கல்லூரி வளாகத்தில் திருவள்ளுவர் திறந்தவெளி கலையரங்கத்தில் ஆங்கில இலக்கிய மன்றம் (ELA) தொடங்கப்பெற்றது. இதில் முனைவர் ந.ரமேஷ் அவர்கள் வரவேற்புரை நல்கினார் இந்நிகழ்வை கல்லூரி முதல்வர் முனைவர் வே.அன்பரசி அவர்கள் தலைமைதாங்கி ஆங்கில மொழியின் அவசியத்தையும். இலக்கியங்களில் காட்டப்படும் வாழ்வின் நெறிகளையும், மன்றத்தினுடைய செயல்பாடுகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக சேலம் அரசு கலைக்கல்லூரி ஆங்கிலத்துறை இணைப்பேராசிரியர் முனைவர். க.அன்பழகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அதில் ஆங்கில இலக்கியம் சார்ந்த நிகழ்வுகளையும், மொழியோடு இணைந்த இலக்கிய சிந்தனைகளை படைப்புகளாக மாற்றும் வித்தினையும், புத்தகம் வாசித்தல், கவிதை, நாடகம், திரைப்படம் போன்ற ஆங்கில இலக்கிய மன்றப் பிரிவுகளையும் அதனை கையாளும் வித்தினையும் சிறப்பாக எடுத்துரைத்தார். இதைத்தொடர்ந்து மன்றத்தின் பொறுப்பாளர்களாக மாணவர்கள் பதவியேற்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். மேலும் மாணவ/மாணவிகளின் இலக்கியம் சார்ந்த கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விழாவின் நிறைவாக கௌரவ விரிவுரையாளர் முனைவர்க.சங்கீதா அவர்கள் நன்றியுரையாற்றினார். மாணவ/மாணவியர்கள், அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் பங்கு பெற்ற இந்த இனிய நிகழ்வினை இலக்கிய மன்ற மாணவ பொறுப்பாளர்கள் நே.அசோக்குமார் மற்றும் அ.பிரின்ஸி ஒருகிணைத்து நடத்தினர்.


தலைவர்
CMR முருகன்


GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE
Department of English
English Literary Association
CMR முருகன்


GOVERNMENT ARTS AND SCIENCE COLLEG
Pappireddipatti, Dharmapuri - 636 905.
Department of Englis
English Literary Association (E
PLATTO


GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE
Department of English